IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 42/2024

Deposition of Witness : DW 1

Name : ஜான்சிராணி (வயது – 45)

Father's Name /W/o : க/பெ ரமேஷ்

Calling : –

Address : திருமால்பூர்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.07.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கின் 3 ஆம் பிரதிவாதி என்றாலும் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்துதான் என் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் படித்து பார்த்துதான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். வாதி என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் என் பாட்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. என் பாட்டி இறந்த பிறகு பட்டா மாறுதல் செய்து கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்தை பிரித்து கொள்வதற்கு நான் ஒப்புக் கொண்டேன் என்றால் சரிதான். தீர்ப்புக்கு பிறகு வழக்கறிஞர் ஆணையர் வைத்து இறுதி தீர்ப்பு தாக்கல் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி இறுதி தீர்ப்பாணையில் சட்டப்படியாக பொது வழிவிட்டு பாகம் பிரித்து கொள்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் ஆம். மேற்படி வழக்கறிஞர் ஆணையர் அளந்து

அறிக்கை தாக்கல் செய்த பிறகு இறுதி தீர்ப்பாணையில் நான் கட்டிய வீட்டின் இடம் வேறொருவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டால் என் வீட்டை இடித்து கொள்வதற்கு சம்மதமா என்றால் சம்மதம். வாதி எனக்கு சொத்து தரமாட்டேன் என்று சொன்னதாக என் பிரமாண வாக்குமூலத்தில் நான் தெரிவித்து உள்ளது தவறு என்றால் சரியல்ல.

3. இந்த வழக்கில் சொத்து குறித்து நான்தான் வழக்கறிஞரை வைத்து வாதியை மிரட்டினேன் என்றால் சரியல்ல. வாதி மீது புகார் மட்டும் தான் அளித்தேன். நான் ஆட்கள் வைத்து சொத்தில் இடையூறு செய்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கில் பரிகார தீர்ப்பு வழங்குவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.